வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 22.02.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தாக்கம் பற்றிய உச்சி மாநாட்டின் மூலம் உலக நாடுகளின் கவனம் இந்தியா மீது திரும்பியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று மீரட்டில் சுமார் 12 ஆயிரத்து 930 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைத்து, நாட்டிற்கு அர்பணித்தார்.
- மத்திய அரசு, மக்கள் நலனுக்காக நல்லாட்சியை வழங்குவதில் உறுதியாக இருப்பதாக வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு.சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரி காவல்துறையில் காலியாகவுள்ள 70 உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்து தேர்வு 4 மையங்களில் இன்று நடைபெற்றது.

***மனதின் குரல் -1 (09)***

புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தாக்கம் பற்றிய உச்சி மாநாட்டின் மூலம் உலக நாடுகளின் கவனம் இந்தியா மீது திரும்பியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பான 131ஆவது மன்கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த உச்சி மாநாட்டின்போது நடைபெற்ற கண்காட்சியில் விலங்குகளுக்கு சிகிச்சை

அளிப்பதில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு எடுத்துரைக்கப்பட்டதாக பிரதமர் கூறினார். மனதின் குரல் நிகழ்ச்சி பற்றிய மேலும் சில தகவல்கள்.

*மனதின் குரல்-2 (18)*

உலக எதிர்கால செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டில் புதுடெல்லியில் நடைபெற்ற, செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி 131ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசுகையில் புகழாரம் சூட்டியுள்ளார். நாட்டின் பழமையான நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் பாதுகாக்கப்படுவதும், நூலினை வாசிப்பதற்கேற்ற முறையில் மாற்றுவது, மொழிபெயர்க்கப்படுவது குறித்து உலகத் தலைவர்கள் வியந்து பாராட்டியதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். குடியரசு தலைவர் மாளிகையில் நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் மூதறிஞர் ராஜாஜியின் திருவுருவச் சிலை திறக்கப்படவுள்ளதாக தெரிவித்த பிரதமர், அதிகாரத்தை, பதவியாக அல்லாமல் சேவையாக ஏற்றவா ராஜாஜி என புகழாரம் சூட்டினார். டிஜிட்டல் கைது குறித்து பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும், இது தொடர்பான நிதிமோசடி குற்றச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவது கவலையளிப்பதாக கூறிய பிரதமர், போலி அழைப்புகள், குறுஞ்செய்திகள் உள்ளிட்டவை குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

*மனதின் குரல் -3 (19)*

வங்கிகளின் அதிகாரப்பூர்வ செயல்கள் மூலம் பெறப்படும் தகவல்கள், ஓடிபி, ஆதார் எண் அல்லது வங்கி கணக்கு விவரம் உள்ளிட்டவற்றை யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் எனவும், கடவுச் சொற்களை அவ்வப்போது மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் பிரதமர் திரு.நரேந்திர மோடி அறிவுறுத்தினார். KYC புதுப்பிப்பது சம்பந்தமாக எழும் கேள்விகளுக்கு, நேரடியாக வங்கிகளை அணுக வேண்டும் என்று தெரிவித்த அவர், இந்திய ரிசர்வ் வங்கி சார்பில் இது சம்பந்தமான நிதி சார் விழிப்புணர்வு இரு வார நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார். அதுமட்டுமின்றி, விவசாயிகள் தற்போது உற்பத்தியில் மட்டுமல்லாமல் அதன் தரம், புதிய சந்தைகள், மதிப்புக் கூட்டுப் பொருட்கள் உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்தி வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என குறிப்பிட்ட பிரதமர் உலகின் மிகப்பெரி அரிசி உற்பத்தி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதையும் சுட்டிகாட்டினார். உள்நாட்டு உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் உலகளாவிய தேவைக்கும் இந்தியா பங்களிப்பது குறித்தும் பெருமிதம் தெரிவித்தார். தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள் அனைவரும் வெற்றிபெற வாழ்த்திய பிரதமர், மன அழுத்தமின்றி தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

*மனதின் குரல் -4 (15)*

தொடர்ந்து, பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78ஆவது பிறந்த நாள் வரும் 24ஆம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில், அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, பெண்களின் நலன், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு ஆகியவற்றில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டவர் ஜெயலலிதா என புகழாரம் சூட்டினார். தற்போது நடைபெற்று வரும் டி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில், கனடா அணியில் அதிக எண்ணிக்கையிலான

இந்திய வம்சா வளியினர் பங்கேற்றுள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர், அமெரிக்கா, ஓமன் அணிகளிலும் இந்திய வம்சாவளி வீரர்கள் இடம் பெற்றிருப்பது நம் நாட்டின் தனித்துவ அடையாளமாக விளங்குவதாக தெரிவித்தார். புனித ரமலான, ஹோலி உள்ளிட்ட பண்டிகைகளுக்கு வாழ்த்து தெரிவித்துக்கொண்ட பிரதமர் திரு. நரேந்திர மோடி, பண்டிகை காலங்களில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்கி உள்ளூர் வியாபாரிகளை ஊக்குவிக்க வேண்டும் என அவர் நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

***குடியரசு துணை தலைவர் (10)***

மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார். இன்று சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியாரின் மாளிகையில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்திய பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் அமெரிக்காவில் வரிக்குறைப்பு நடவடிக்கையால் இந்தியப் பொருளாதாரம் மேம்படும் என நம்பிக்கை தெரிவித்தார். முன்னதாக, மதுரை வண்டியூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ. சிதம்பரனாரின் சிலை கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

***சோனோவால் (06)***

மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், நாளை சென்னையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தமிழ்நாடு வருகிறார். சென்னை, உத்தண்டியிலுள்ள கடல்சார் பல்கலைக்கழகத்தில் புத்தாக்க ஆய்வகத் திறப்புவிழாவில் பங்கேற்கவுள்ளதாக பல்கலைக்கழக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பிரதமர் மீரட் 1 (13)*

பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று மீரட்டில் உள்ள சதாப்தி நகர் நமோ பாரத் நிலையத்தில் மீரட் மெட்ரோ மற்றும் நமோ பாரத் ரயிலை கொடி அசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து, அவர் மீரட் தெற்கு நிலையம் வரை மெட்ரோ பயணம் மேற்கொண்டார். மீரட்டில் சுமார் 12 ஆயிரத்து 930 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைத்து, நாட்டிற்கு அர்பணித்தார். கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், இன்று தொடங்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் வளர்ச்சியடைந்த பாரதம் என்னும் உந்துதலை அளிக்கும் என கூறினார். இரட்டை இஞ்சின் அரசின் வளர்ச்சியை இத்திட்டங்கள் எடுத்துக்காட்டுவதாகவும் அப்போது அவர் வலியுறுத்தினார். தொடர்ந்து பேசிய உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத், இத்திட்டங்கள் அனைத்தும் மாநில மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் என தெரிவித்தார்.

*பிரதமர் மீரட் 2 (13)*

இந்தியாவின் முதல் நமோ பாரத் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பின் பிரிவுகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று நாட்டிற்கு அர்ப்பணித்தார். இதில், டெல்லியிலுள்ள செராய் காலே கான் மற்றும் நியூ அசோக் நகர் இடையிலான 5 கிலோ மீட்டர் பகுதியும், உத்தரபிரதேசத்திலுள்ள மீரட் தெற்கு மற்றும் மோடிபுரம் இடையேயான 21 கிலோ மீட்டர் பகுதியும் அடங்கும். மணிக்கு 180 கிலோமீட்டர் வேகத்தில் வடிவமைக்கப்பட்ட நமோ பாரத், இந்தியாவின் முதல் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பாக விளங்குகிறது. இதன் மூலம் சாஹிபா பாத், காஜியா பாத், மோடி நகர் மற்றும் மீரட் போன்ற முக்கிய நகர்ப்புற மையங்களை டெல்லியுடன் வேகமாக இணைக்கு முடியும். மீரட் மெட்ரோ என்பது மணிக்கு 120கிலோ மீட்டர் அதிகபட்ச செயல்பாட்டு

வேகத்துடன் இந்தியாவின் வேகமான மெட்ரோ அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

*சிவராஜ் சிங் (11)*

மத்திய அரசு, மக்கள் நலனுக்காக நல்லாட்சியை வழங்குவதில் உறுதியாக இருப்பதாக வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார். அவர் இன்று ஆந்திர பிரதேச மாநிலம், திருமலையிலுள்ள ஸ்ரீ வெங்கடாசலபதி கோவிலில் தரிசனம் மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். ஆந்திர பிரதேச மாநிலத்தின் வேளாண் அமைச்சர் திரு. அச்சன் நாயுடு, மத்திய வேளாண் அமைச்சருடன் திருமலையில் முக்கிய ஆலோசனை மேற்கொண்டார். அப்போது மாநிலத்தின் நுண் நீர்ப்பாசன திட்டத்திற்கான மத்திய நிதியில், நிலுவையிலுள்ள தொகையை விரைவில் விடுவிக்கப்படும் என மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் உறுதியளித்தார்.

*திருக்காஞ்சி (11)*

புதுச்சேரி, வில்லியனூரை அடுத்துள்ள திருக்காஞ்சியில் சங்கராபரணி ஆற்றங்கரையில் முப்பது கோடி ரூபாய் மதிப்பீட்டில் 108 அடி உயர சதாசிவ மூர்த்தி சிலை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக 27 நட்சத்திரங்களுக்கான சிலை அமைக்கும் பணிகள் முழுமையான நிறைவடைந்துள்ள நிலையில், கும்பாபிஷேக விழா இன்று நடைபெற்றது. இதில் புதுச்சேரி வேளாண் அமைச்சர் திரு. ஜெயக்குமார், துணை சட்டப்பேரவைத் தலைவர் திரு.ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு. வைத்தியநாதன் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். 3 அடுக்காக அமையவுள்ள

இக்கோவிலில் தற்பொழுது அடித்தளத்திலுள்ள சன்னதிகளின் பணிகள் நிறைவடைந்து கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

***<u>உதவி ஆய்வாளர் (10)</u>***

புதுச்சேரி காவல்துறையில் காலியாகவுள்ள 70 உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்து தேர்வு லாஸ்பேட்டையிலுள்ள காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் கிழக்கு கடற்கரைச் சாலையிலுள்ள தனியார் பள்ளிகள் உள்ளிட்ட 4 மையங்களில் எழுத்து தேர்வு இன்று நடைபெற்றது. காலை 10 மணிமுதல் 12 மணி வரை முதல் தாளும், பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை 2ஆம் தாள் என நடைபெற்ற தேர்வில் 1,284 தேர்வர்கள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர். அனைத்து தேர்வு மையங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

***<u>வானிலை (11)</u>***

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனையொட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்க க்கடல் பகுதியில் இன்றுகாலை 8.30 மணியளவில் காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைந்து அதே பகுதியில் நிலவுகிறது. மேலும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மேற்கு, வடமேற்கு திசையிலும், பிறகு வடகிழக்கு திசையிலும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி நகரக்கூடும் என்பதால் இன்று வட தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து, இம்மாதம் 25ஆம் தேதியும் லேசான மழை எதிர்பார்க்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*__கிரிக்கெட் (08)__*

ஐசிசி ஆடவர்களுக்கான உலகக் கோப்பை டி-20 கிரிக்கெட் போட்டியின் சூப்பர் 8 சுற்று ஆட்டத்தில் இன்றிரவு 7 மணிக்கு அகமதாபாத்தில் நடைபெறவுள்ள போட்டியில் இந்திய அணி, தென்னாப்பிரிக்க அணியை எதிர்கொள்கிறது. இலங்கையிலுள்ள பல்லேகலே சர்வதேச மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு தொடங்கிய மற்றொரு போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணியால் முதலில் ஆடப் பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி 146 ரன்களில் ஆட்டம் இழந்தது. அடுத்து விளையாடி வரும் இலங்கை அணி சற்று முன்வரை …. ஓவரில் ………. விக்கெட் இழப்பிற்கு……………. ரன் எடுத்துள்ளது.

*__நீதிபதி ஆந்திர பிரதேஷ் (09)__*

மத்திய உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி ஆந்திர பிரதேச மாநிலம், அமராவதியிலுள்ள நீதித்துறை அகாடமியில் நீதிபதிகள் மற்றும் அரசு வழக்கறிஞர்களுக்கான மாற்றுத் திறனாளிகள் குறித்த பயிற்சி மற்றும் உணர் திறன் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. மாற்றுத் திறனாளிகள் தொடர்பான வழக்குக்குகளைக் கையாள்வதில் நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் பங்கு குறித்து இந்நிகழ்ச்சியின்போது விவாதிக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை எவ்வாறு நிலைநிறுத்துவது குறித்து சட்ட நிபுணர்கள், பங்கேற்பாளர்களுக்கு எடுத்துரைத்தனர்.

*__ஆரோவில் (11)__*

ஆரோவில் சர்வதேச நகரத்தை உருவாக்கிய அன்னையின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், ஆரோவில்லில் உள்ள முக்கிய சாலையான க்ரௌன் சாலையில் க்ரௌன் வாக் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆரோவில்லின் வளர்ச்சியையும், அதன் ஆன்மிக நோக்கத்தையும் பறைசாற்றும் வகையில் இந்த ஊர்வலத்தில், சர்வதேச பிரதிநிதிகள் பலர்

கலந்து கொண்டனர். ஆரோவில் அறக்கட்டளையின் செயலாளரும், மூத்த ஐஏஎஸ் அதிகாரியுமான ஜெயந்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில், ஜெர்மனி தூதரகத்தின் கௌரவத் தூதர் மைக்கேல் ஹாஸ்பர் கலந்து கொண்டார். தொடர்ந்து இந்திய பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் கோலாட்டம், தற்காப்புக் கலைகளான களரி, சிலம்பம் உள்ளிட்டவை வழிநெடுகிலும் நிகழ்த்தப்பட்டன.